# GOVERNMENT ARTS COLLEGE (AUTONOMOUS)

(Re-accredited with "A" Grade by NAAC and Affiliated to Bharathidasan University, Tiruchirappalli)

## KARUR – 639 005

**Dr. S. KOUSALYA DEVI, M.Sc., *M.Phil., PGDCA., Ph.D.*** **Ph: 04324 - 257534**
**Principal**


**Date: 18-12-2020**

## மாணவர்களுக்கான அறிவுரைகள்

1. மாணாக்கர்கள் எழுத்துத் தேர்வினை A4 வெள்ளை நிறத் தாளில் மட்டுமே எழுதுதல் வேண்டும். முதல் பக்கத்தின் வலது மேற்புறத்தில் மாணாக்கருடைய பதிவு எண், தேர்வு தாளின் தலைப்பு, தேர்வு தாளின் பாடக் குறியீடு, தேர்வு நடைபெறும் நாள் மற்றும் மொத்தம் எழுதிய பக்கங்கள் ஆகியன இருத்தல் வேண்டும். இதனை தேர்வு தொடங்குவதற்கு முன்னதாக மாணாக்கர்கள் தயார் செய்து வைத்திருக்க வேண்டும்.

2. விடைத்தாளின் இரண்டாவது பக்கத்திலிருந்து கடைசி பக்கம் வரை மாணாக்கருடைய பதிவு எண் மற்றும் கையொப்பம் இருத்தல் வேண்டும். (பக்கத்தின் மேற்புற வலது மூலையில் மாணாக்கருடைய பதிவு எண்ணும், தாளின் கீழ்புற வலதுமூலையில் மாணாக்கருடைய கையொப்பமும் இருத்தல் வேண்டும்).

3. மாணாக்கர்கள் தேர்வுகளை நீலநிறம் அல்லது கருப்புநிற மை கொண்டு மட்டுமே சுயமாக எழுதவேண்டும். விடைத்தாள்களை தட்டச்சு செய்தல், புத்தகங்களின் ஒளிநகல்களை எடுத்து இணைத்தல் மற்றும் cut, copy and paste முறையிலோ சமர்பித்தல் தடைசெய்யப்பட்டுள்ளது. தேர்வுகளை 20 பக்கங்களுக்கு மிகாமல் எழுத வேண்டும். மாணாக்கர்கள் கடந்த பருவங்களில் (semesters) எழுதியுள்ள தேர்வுத்தாள்களின் கையெழுத்துப் பிரதிகளோடு ஒப்பிட்டுப் பார்த்த பின்னரே தற்போதைய online தேர்வு விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யப்படும். மாணாக்கர்கள் தேர்வு முறைகேடுகளில் ஈடுபடுவது கண்டறியப்பட்டால் கல்லூரி விதிகளின்படி தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

4. மாணாக்கர்கள் தங்களின் பெயர், வகுப்பு, வரிசை எண், மற்றும் முகவரியைக் குறிப்பிட்டு தேர்வுகள் முடிந்த பின்பு தேர்வு எழுதிய விடைத்தாள்களை நூல் கொண்டு கட்டி உறையிலிட்டு <u>துறைத்தலைவருக்கு</u> கூரியர் மூலமாகவோ அல்லது விரைவுத் தபால் மூலமாகவோ அல்லது பதிவு தபால் மூலமாகவோ உடனடியாக அனுப்புமாறு அறிவுறுத்துதல் வேண்டும்.

5. மாணாக்கர்கள் தேர்வு நுழைவுச்சீட்டினை (Hall Ticket) பதிவிறக்கம் செய்து பத்திரமாக வைத்திருக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

[signature] 18/12/20 | [signature] 18/12/2020
---|---
தேர்வு நெறியாளர் | முதல்வர்
அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி) | முதல்வர்
கரூர் - 639 005. | அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி)
| கரூர் - 639 005.